# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 165/2019 | Date : 15.07.2025 | PW 1 |
|---|---|---|
| Name: மாரியப்பன் | த/பெ. மயில்சாமி | |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தை கிரயம் பெறும் போது அளவீடு செய்யாமல் கிரயம் பெற்று என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சொத்தை வாங்கும்போது எல்லைகள் சரியாக இருந்ததால் அளவீடு செய்யாமல் வாங்கியுள்ளோம். நான் நிலஅளவையரை வைத்து தாவா சொத்தை அளந்து சுவாதீனம் பெற்றுக்கொளளவில்லை என்றால் சரியல்ல. நான் நீளம் மற்றும் அகலத்தை அளந்து பார்த்துதான் சுவாதீனம் பெறறேன். நான் கிரயம் பெற்றபிறகு வருவாய் துறையினரைஅழைதது அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கு பட்டாவை தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா கிரய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன் என்பதற்கு அ பதிவேடோ, அல்லது அடங்கல் பதிவேடோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயிர் செய்கிறேன் என்பதற்கு பயிர் கடன் பெற்றுள்ளேன். தாவா சொத்தின் சந்தை மதிப்புஎன்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்தின் சந்தை மதிப்பு தெரிந்து கொண்டு தாவா சொத்தை வாங்கினேன். பிரதிவாதி என்னிடம் மாதா மாதம் வட்டி செலுத்தி வந்தார் என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் தாவா சொத்தை விற்பனை செய்யவில்லை என்றாலும், என்னிடம் ரூ.5 லட்சம் கடன் பெறுவதற்காக கிரய ஆவணம் எனக்கு எழுதி கொடுத்தார் என்றாலும் எனக்கு கிரயம் செய்து கொடுக்க வேண்டிய நோக்கில் தாவா சொத்தை எனக்கு கிரயம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கிய தொகைக்காக பெரியோர்கள் முன்னிலையில் சமரசம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கிய தொகைக்கு பிரதிவாதி மாதா மாதம் வட்டி செலுத்தி வந்தார் என்றாலும் பிரதிவாதியால் வட்டி செலுத்தமுடியாத காரணத்தினால் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தற்போது அவர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு கிரயம் செய்து கொடுத்த ஆவணம் பெயரளவில்ஏற்பட்ட கிரய ஆவணம் என்றாலும் மேற்படி ஆவணம் ஒரு கடனுறுதிப்பத்திரமே தவிர கிரய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் தொகைக்கு வட்டியுடன் தொகை செலுத்த தயாராக உள்ளார் என்றாலும் அவரது பூமியின் சந்தை மதிப்புஅதிகமானதால் அதனை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும்

அதனால்தான் நான் தாவா சொத்தில் விவசாயம் செய்வதற்கு எந்த ஆவணமும் தாக்கல செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் என் அனுபவத்தை அவர் தொந்தரவு செய்வதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு செண்டின் மதிப்பு கடந்த 2017 ம் வருடமே ரூ. 4, 5 லட்சத்திற்கு மேல் சந்தை மதிப்பு இருக்கும் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் சுவாதீனத்தையும் அனுபவத்தையும் தொந்தரவு செய்வதற்காக பொய் வழக்கு தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல செய்துள்ள வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

ஒம்/—மாரியப்பன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/— R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.